# இந்து சமயத் தத்துவங்களில் மனிதநேய ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் சங்கரரின் அத்வைதக் கோட்பாடு: ஏனைய இந்து தத்துவங்களுடனான ஓர் ஒப்பிட்டாய்வு

**N. Subaraj**
Department of Languages, South Eastern University of Sri Lanka
subaraj84@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்:**

வைதிக தத்துவங்களுள் ஒருமை வாதம் பேசும் ஒரே கோட்பாடு அத்வைதமாகும். இது கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவைச் சேர்ந்த சங்கராச்சாரியாரால் தோற்றம் பெற்றது. இதன் பின்பு தோற்றம் பெற்ற இராமானுஜரின் விசிட்டாத்வைதம், மத்துவாச்சாரியாரின் துவைதம் அத்தோடு சைவசித்தாந்தம் ஆகிய கோட்பாட்டு நெறிகள் அத்வைதத்தை விமர்சிக்க தவறவில்லை. இப்பெருந் தத்துவங்களுள் அத்வைதம் ஏனைய தத்துவங்களை விட மனிதநேய ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றது. பொதுவாக தத்துவங்கள் மனிதநேயச் சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டவை. தத்துவங்களின் நோக்கம் இருப்புப் பொருட்களின் தேடலை மேற்கொள்வது மட்டுமே. ஆனால் இத்தகைய தேடல்களுக்கு மத்தியில் மனிதநேய ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தும் தத்துவமாக எங்ஙனம் அத்வைதம் அமைகின்றது என்பது ஆய்வுப் பிரச்சினையாகவுள்ளது. பிரம்மம், ஜீவன், சடவுலகம் போன்ற தத்துவ ஞானங்கள் பற்றிய தேடல்களுக்கு மத்தியில் மனிதநேய ஒருமைப்பாட்டை எங்ஙனம் அத்வைதக் கோட்பாடு சுட்டி நிற்கின்றது என இனங்காண்பது இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வு, கோட்பாட்டு ஆய்வு, ஒப்பியல் ஆய்வு ஆகிய முறைகளைப் பின்பற்றுகின்றது. அத்வைதச் சிந்தனைகள் எவ்வாறு மனிதநேயங்களை வெளிப்படுத்துகின்றன என்பது பற்றி ஆராய்வதற்கு கோட்பாட்டாய்வு பயன்படுத்தப்படும். சங்கரரின் அத்வைதத்துடன் ஏனைய வைதிக தத்துவங்களை ஒப்பிட்டு மனிதநேய ஒருமைப்பாடு பற்றி ஆராய்வதற்கு ஒப்பியல் ஆய்வு பயன்படுத்தப்படும். இவ்வாய்வின் முதலாம் தர மூலங்களாக சங்கரரின் நூல்கள், பாஷ்யங்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. துணை மூலங்களாக சங்கரரின் அத்வைதம் தொடர்பாகவும், இந்திய மெய்யியல் தொடர்பாகவும் வெளிவந்த நூல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அத்வைதம் வேற்றுமையில் ஒற்றுமையை வலியுறுத்துகின்ற தத்துவமாகும். ஏனைய தத்துவக்கோட்பாடுகள் போன்று அத்வைதம் ஜீவாத்மாக்களுக்கிடையே பேதம் கற்பிக்காமல் ஒருமை வாதத்தினூடாக மனிதநேய ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றது.

***பிரதான சொற்பதங்கள்**: அத்வைதம், ஒருமைப்பாடு, சங்கரர், மனிதநேயம்*

## அறிமுகம்:

இந்து மெய்யியல் தொடர்பான அறிவு முதல் ஆராய்ச்சி இந்து சமயத்தில் இருந்து பிரித்து நோக்கப்பட முடியாத ஒரு பகுதியாக உள்ளது. இந்து மெய்யியல் தொடர்பான சிந்தனைகளும், ஆய்வுகளும் தொடர்ந்து இடம் பெற்ற வண்ணமே உள்ளன. இந்து மெய்யியலுக்கென ஒரு வரலாறு கூறப்படுமாயின் மிகச் சிறப்பு வாய்ந்த இந்து தத்துவச்சிந்தனைகளை அது கண்டிருக்கின்றது.

இருப்புப் பொருட்களின் தன்மை எத்தகையது என்பது பற்றிய தேடலே இத்தகைய தத்துவ சிந்தனைகளின் முக்கிய நோக்கமாகும். இவற்றின் தேடல்களும் அது மையப்படுத்திய சிந்தனைகளும், தத்துவப்போக்குகளும் அவ்வவர்களின் ஆராய்ச்சிகளைப் பொறுத்தே அமைகின்றன. காலந்தோறும் தோன்றி வளரும் தத்துவச் சிந்தனைகள் அனைத்தும் முன்னைய சிந்தனைகளுடன் பெரிதும் ஒன்றியே காணப்பட்டாலும் தனக்கென தனித்துவமான சிந்தனைகளை அல்லது புதியதோர் சிந்தனைகளை கூறிவிடாமல் செல்வதில்லை.

வைதிக தத்துவமான வேதாந்த சிந்தனை மரபில் ஒருமை வாதம் பேசும் சங்கரரின் அத்வைதம் வைதிக தத்துவங்களுள் சிறப்பானதும், சற்று மாறுபாடான

சிந்தனைகளைக் கொண்டதுமாகும். பிரஸ்தான திரயங்களுக்கு எழுதப்பட்ட வெவ்வேறு பாஸ்யங்களே வேதாந்த தத்துவங்களாக உருவாகின. இவ்வடிப்படையில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது சங்கரரின் (கி.பி.788 – 820) அத்வைதக் கோட்பாடாகும்.

அத்வைதக் கோட்பாட்டை விமர்சிப்பதையே நோக்காகக் கொண்டு தோற்றப் பெற்றதே இராமானுஜரின் (கி.பி. 1017 – 1137) விசிட்டாத்வைதமாகும். ஆனால் இராமானுஜரைப் பார்க்கிலும் அத்வைதக் கோட்பாட்டை மிகச்சிறப்பாக விமர்சித்து வளர்ச்சி பெற்ற தத்துவக் கோட்பாடாக விளங்குவது மத்துவாச்சாரியாரின் துவைத வேதாந்தமாகும். இச்சமகாலத்தில் தோற்றம் பெற்ற மற்றுமோர் தத்துமாக சைவசித்தாந்தம் விளங்குகின்றது. வேதாந்தம், சைவசித்தாந்தம் ஆகிய இவ்விருபெரும் தத்துவங்களும் தென்னிந்தியாவுக்குரியன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவ்விரு பெருந் தத்துவங்களுள் வேதாந்தப் பிரிவுக்குள் உள்ளடங்கும் ‘‘அத்வைதம்’’ மனிதநேய ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றது. இது எவ்வகையில் பொருத்தப்பாடுடையது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

**ஆய்வுப் பிரச்சினை**

பொதுவாக தத்துவங்கள் மனிதநேயம், ஒற்றுமை போன்ற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டது. தத்துவங்களின் நோக்கம் இருப்புப் பொருட்களின் தேடலை மேற்கொள்வது மட்டுமே. இருத்தலுக்குரியது எது? எதனை பரம்பொருளென அழைப்பது? ஆன்மா என்பது என்ன? அது எவ்வாறு தோன்றியது? பிரபஞ்சம் எவ்வாறு தோன்றியது? என்பது பற்றிய தேடலாக அமைவதே தத்துவமாகும். ஆனால் இத்தகைய தேடல்களுக்கு மத்தியில் மனிதநேய ஒருமைப்பாட்டையும் வலியுறுத்தும் தத்துவமாக அத்வைதம் காணப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கங்கள்**

1. பிரம்மம், ஜீவன், சடவுலகம் போன்ற தத்துவ ஞானங்கள் பற்றிய தேடல்களுக்கு மத்தியில் மனிதநேய ஒருமைப்பாட்டை எங்ஙனம் அத்வைதக் கோட்பாடு சுட்டி நிற்கின்றது என இனங்காணல்
2. இவ்வாறன எடுத்துக் காட்டு மூலம் அத்வைத சிந்தனையை பற்றிய ஆழமாகப் புரிதலுக்குள்ளாதல்
3. அத்வைதம் வெளிப்படுத்தும் மனிதநேயச் சிந்தனைகளை ஏனைய வைதிக தத்துவங்களுடன் ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் இது பற்றி தெளிவான புரிதலுக்குள்ளாதல்

**ஆய்வு முறையியல்**

01. கோட்பாட்டு ஆய்வு:
அத்வைதம் எனும் மெய்யியல் கோட்பாட்டின் அடிப்படைச்சிந்தனைகள் எவ்வாறு மனிதநேயங்களை வெளிப்படுத்துகின்றன என்பது பற்றி ஆராய்வதற்கு கோட்பாட்டாய்வு பயன்படுத்தப்படும்.

02. ஒப்பியல் ஆய்வு:
சங்கரரின் அத்வைதத்துடன் சைவசித்தாந்தம், இராமானுஜரின் விசிட்டாத்வைதம், மத்துவரின் துவைதம் மற்றும் ஏனைய வைதிக தத்துவங்கள் ஒப்பிட்டு மனிதநேய ஒருமைப்பாடு பற்றி ஆராய்வதற்கு ஒப்பியல் ஆய்வு பயன்படுத்தப்படும்.

**ஆய்வு மூலங்கள்**

இவ்வாய்வின் முதலாம் தர மூலங்களாக சங்கரரின் நூல்கள், பாஷ்யங்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. துணை மூலங்களாக சங்கரரின் அத்வைதம் தொடர்பாகவும், இந்திய மெய்யியல் தொடர்பாகவும் வெளிவந்த நூல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**ஆய்வு முடிவுகள்**

அத்வைதம் என்பதன் பொருளை நோக்கின் இது அ + துவைதம் என்று பிரிக்கப்பட்டு அ என்றால் அல்ல எனவும் துவைதம் என்றால் இரண்டு என பொருள் கொள்ளப்பட்டு உண்மைப் பொருள் இரண்டு அல்ல ஒன்றே எனக் கூறப்படுகின்றது. அதாவது பிரம்மம் மற்றும் ஆன்மா என்று குறிப்பிடப்படும் சார்பற்ற பரம்பொருளே உண்மைப்பொருள் என்று அத்வைதம் குறிப்பிடுகின்றது. இதனை ''பிரம்மமே உண்மையான பொருள், இந்த உலகம் ஒரு தோற்றமே, ஒவ்வொரு ஆன்மாவும் பிரம்மமே வேறில்லை'' என்று குறிப்பிடலாம்.

அத்வைதக் கொள்கையின்படி பிரம்மம் எனும் பரம்பொருள் மாத்திரமே உண்மையான பொருள் ஏனைய ஆன்மா மற்றும் உலகம் என்பன தோற்றப்பொருற்களேயாகும். இதில் ஆன்மா என்பது உண்மையானதல்ல. பிரம்மமே ஆன்மா என்பதனை பிரதிவிம்பவாதம், அபச்சேத வாதம் என்பனவற்றின் ஊடாகவும் உலகம் என்பது உண்மையானதல்ல அது ஒரு தோற்றப்பொருள் என்பதனை விவர்த்த வாதம். கனவு நனவு வாதம் என்பனவற்றின் ஊடாகவும் சங்கரர் தெளிவுபடுத்துகின்றார். இவ்வாறு உள்ளது ஒரே ஒரு ஆன்மாவே அதுவே பரமான்மா என்று குறிப்பிடும் காரணத்தினால் இவருடைய கொள்கையானது ஏகான்மவாதம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

**பிரதிவிம்ப வாதம்:** பிரம்மம் மட்டுமே உண்மை ஆன்மா என்பது உண்மையல்ல என்பதனை மூலச் சந்திரன் ஒன்றே ஆனால் அது இவ்வுலகத்தில் உள்ள நீர் நிலைகளில் பலவாறு தெரிகின்றது. நீர்நிலைகள் வற்றியதும் சந்திரன் மட்டுமே எஞ்சி இருக்கும் அது போலவே பிரம்மம் மாத்திரமே உண்மை அப்பிரம்மமே அவித்தை காரணமாக பல்வேறு ஆன்மாக்களாக தோற்றமளிக்கின்றது அவித்தை நீங்கியதும் பிரம்மம் மாத்திரமே உண்மையானது என்ற உண்மை புலனாகும் என்று குறிப்பிடுகின்றார்.

**அவச்சேத வாதம்:** ஆன்மா என்பது பிரம்மம்தான் என்பதனை வளி எங்கும் பரந்துள்ளது எனினும் அவ்வளி குடத்தினுள் அடக்கப்படும் போது வடிவத்தினை பின்பு உடைக்கப்படும் போது ஏனைய வளியுடன் கலக்கின்றது இதே போலவே ஆன்மாவும் பிரமமும் ஒன்றே ஆன்மா மாயையின் காரணமாக வேறுபடுகின்றது.

**விவர்த்தவாதம்:** உலகம் இல்லாதபொருள் என்பதனை இதன்மூலம் விளக்குகின்றார். இருளில் கயிறு பாம்பாக தென்படுவது போல் பிரம்மமே மாயையின் காரணமாக உலகமாக தோன்றுகின்றது என கூறுகின்றார் இதன்படி இருள் நீங்கி வெளிச்சம் வந்தவுடன் கண்டது பாம்பு அல்ல கயிறுதான் என்ற உண்மை புலனாகும் அதுபோல மாயை நீங்கியதும் காண்பது உலகு அல்ல மாறாக பிரம்மமே என்ற உண்மை புலனாகும் என்று குறிப்பிடுகின்றார்.

**கனவு, நனவு வாதம்:** இவ்வாதத்தினை உலகம் என்பது உண்மையானது அல்ல என்பதனை நிறுபனம் செய்வதற்காக பயன்படுத்துகின்றார். இதன்படி கனவுலகிலே நாம் காணும் உலகினை நனவுலகிலே காணமுடியாது அதுபோல கனவுலகிலே காணும் உலகினை நனவுலகிலே காணமுடியாது எனவே உலகம் என்பது உண்மையானது அல்ல என்று நிறுபனம் செய்கின்றார்.

அத்வைதம் பேசும் ஒருமைப்பாடு பற்றி ஹிரியண்ணா கூறும் கருத்துக்கள் ஈண்டு நோக்கற்பாலது. மனிதனுக்குள்ள குறுகிய அகத்தைப் பற்றிய குருட்டு அன்பினால் தனிப்பட்டவைகளிடம் ஏற்படும் பற்றிற்குப் பதிலாக அறிவு விளக்கம் பெற்றதனால் அனைவரிடமும் ஒத்த அன்ப கொள்ளும் நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது. நம்மைப் போல் பிறரைப் பார்க்க வேண்டும். அவர்கள் நாமே ஆதலின் ஒழுக்கம் பற்றிய சிறந்த விதிக்கு இக்கருத்து உறுதியான கால்கோள் அமைக்கின்றது. எவன் தன்னில் எல்லா உயிர்களையும், எல்லா உயிர்களில் தன்னையும் காண்கின்றானோ அவன் யாரையும் வெறுப்பதில்லை என அத்வைத்தின் ஒருமைப்பாட்டுச் சிந்தனைகள் பற்றி விபரிக்கின்றார் தத்துவறிஞர் ஹிரியண்ணா.

அத்வைதம் ஏனைய வைதிக தத்துவங்களைப் போலல்லாது வேற்றுமையில் ஒற்றுமையை வலியுறுத்துகின்ற தத்துவமாகும். மனிதகுல ஒருமைப்பாடு என்பது சாதி, குலம், மதம், மொழி என்பவற்றால் சிதைக்கப்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது. ''இது எனது தேசம்'', ''இப்பொருள் எனக்கு மட்டுமே உரியது'' என்பன போன்ற சுயநலப் போக்குகளே சமூகத்தில் பூசல்கள் ஏற்படுவற்கு ஏதுவாக அமைகின்றன. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று அன்றே சங்கச் செய்யுள் சமுதாய ஒற்றுமையை வலியுறுத்தியது. ஆனால் முடிந்த முடிவான சிந்தனைகளைக் கொண்டிருக்கும் தத்துவ சிந்தனைகளுள் மனிதநேய ஒருமைப்பாட்டை அத்வைதமே வலியுறுத்தி நிற்கின்றது.

## நிறைவுரையும் தீர்வுகளும்

ஆன்மாக்கள் பல உள்ளன என்பது வைதிகத் தத்துவங்கள் அனைத்தினதும் பொதுவான சிந்தனையாகும். ஆனால் ஆன்மாக்கள் பல அல்ல. அவை பலவாகத் தென்பட்டாலும் அவை ஒன்றே. அந்த ஒன்றே பரமாத்மா. ஜீவாத்மா என்ற ஒன்று இருக்கவே முடியாது. எனவே நீ உண்மையில் நீயல்ல. நீ உண்மையில் கடவுள், அதுபோல் நான் உண்மையில் நான் அல்ல. நான் உண்மையில் கடவுள், இதனை நாம் உணர்வதில்லை. இதற்கு அறியாமையே காரணமாக இருக்கின்றது.

சங்கரரின் இத்தத்துவ நோக்கு மனிதன் உலகில் அடிமை நீங்கி இன்பமாக வாழ வேண்டும், அது அவனால் இயலும் என்பதாகும். இந்நோக்கு அவருடைய தலைசிறந்த உலகு தழுவிய மனிதாபிமானத்தையும் தேசப்பற்றையும் சமதர்மப்பற்றையும் தன்னுள் கொண்டது. அன்று நிலவிய சமூகச் சூழ்நிலை அத்தகைய தத்துவ நோக்கை உண்டாக்கித் தந்ததெனலாம்.

ஏனைய தத்துவக்கோட்பாடுகள் ஒருபோதும் பிரம்மத்துடன் ஆன்மாக்களை இணைப்பதில்லை. ஆன்மா வேறு, பிரம்மம் வேறு என்பதனை உறுதியாக வற்புறுத்தி நிற்கின்றன. முத்தி நிலையில் கூட இந்த வேறுபாடு மாற்றமடையாது என அவை வற்புறுத்துகின்றன. ஆனால் அத்வைதம் ஜீவாத்மாக்களுக்கிடையே பேதம் கற்பிக்காமல் ஒருமைவாதத்தினூடாக மனிதநேய ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றது.

## உசாத்துணை நூல்கள்


1. இராமச்சந்திரன். தி.ப. **துவைத வேதாந்தம்,** சென்னைப் பல்கலைக்கழகம், 1981
2. கந்தசாமி.சோ.ந. **இந்திய தத்துவ களஞ்சியம்,** தென்னகத் தத்துவங்கள், *தொகுதி-3,* மெய்யப்பன் பதிப்பகம், சென்னை-2003.
3. மகாதேவன்.T.M.P. **இந்து சமய தத்துவங்கள்**, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1964.

4. Basant Kumar Lal, *Contemporary – Indian Philosophy,* Motilal Banarsidass,Bangalore,Madras, 1973
5. Dasgupta.S. **A History of Indian Philosophy**, *Volume-IV*, Motilal Banarsidass Publication, Delhi, 1991.
6. Pratiba Sinha, *Humanistic Views – In Indian Contemporary Philosophy,* New Delhi, 2007
7. Radhakrishnan.S. **Indian Philosophy**, *Volume –2*, Centenary Edition, Oxford University Press, 1991.
8. Sharma.C. **A Critical Survey of Indian Philosophy**, Motilal Banarsidass Publication, Varanasi, 1994.